**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.5 (L.W.7)**
**SC.NO.75/2018**

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.Sathyanarayanan |
| Father Name | : | |
| Occupation | : | SSI, Security Chennai Police |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.10.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.30 p.m**

**முதல் விசாரணை–**

நான் கடந்த 2000 லிருந்து 2015 வரை இங்கு இருந்தேன். 2008 வரைக்கும் Armed reserved Forces ல் இருந்தேன். கடந்த 21.03.2006 ல் மதியம் 15.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து வந்த தகவலின் படி AR லிருந்து DSP அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு சென்றோம். அங்கு காவ் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு படி 16.45 மணிக்கு கிளம்பி விரிஞ்சிபுரம் காவல் நிலையம் சென்றோம். அங்கிருந்து காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் கையிலாய மலையில் காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசன் உட்பட சுமார் 10 பேர் சென்றோம். அங்கு சென்று பார்க்கும்போது மலை மேல் சாராயம் விற்பதை பார்தோம். எனவே அவர்களை பிடிக்க போனோம். அவர்களின் அருகே போகும்போது 2 பேர் எங்களை துப்பாக்கியால் சுட முற்பட்டார்கள். அப்போது சீனிவாசன் அதிலிருந்து தப்பித்து விட்டார். அதன் பின்னிட்டு அவர்கள் பின்னால் வந்த காவலர்களில் அந்தோணி என்பவரை கத்தியால் இடது கை, மார்பு ஆகிய இடங்களில் தாக்கினார்கள். அப்போது எங்கள் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களை வார்ன் செய்தார். பின்னர் அவர்கள் மீண்டும் தாக்க முயன்றபோது எங்கள் பாதுகாப்பிற்காக நாங்கள் அவர்களை

நோக்கி சுட்ட போது எதிரியின் காலில் காயம் ஏற்பட்டது. 100 லிட்டர் சாராயத்தை அங்கேயே அழித்தோம். பணம் ரூ.100 இருந்தது, அதையும் மற்றும் நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து பாகாயம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். விசாரணை அதிகாரி DCRB ADSP அவர்கள் என்னை விசாரித்தார்கள். காயம்பட்ட அந்ததோணி ராஜா அவர்களை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு வண்டியில் அழைத்து சென்றோம்.

<u>1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

சம்பவ நடந்த தேதி 21.03.2006. யார் எங்களை வர சொன்னார் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் வர சொன்னார். எங்களுக்கு எழுத்து மூலமாக எந்த அழைப்பாணையும் வரவில்லை. 16.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நான், சிவாஜி, சுரேஷ்பாபு, ஜீவா, அந்தோணி ராஜா, ராஜ்குமார் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசன் ஆகியோர்கள் சென்றோம். 16.30 மணிக்கு அலுவலகம் சென்று சேர்ந்தோம். TN 23 G 0394 Eicher வாகனத்தில் போனோம். போன உடனே அங்கிருந்து கிளம்பி விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து 16.30 மணிக்கு கிளம்பி கையிலாய மலைக்கு அதே வாகனத்தில் அனைவரும் சென்றோம்.

நாங்கள் வாகனத்தை நிறுத்தி பார்த்தவுடன் மலை மீது ஆள் நடமாட்டம் தெரிந்தது. கூட்டமாக சுமார் 10 பேர் இருந்திருப்பார்கள் என்றால் வாங்கி கொண்டு வருபவர்களும் போவர்களும் சேர்த்து 10 இருந்திருப்பார்கள். அந்த 10 பேர் யார் யார் என்ன என்ன ஆடை அணிந்திருந்தார்கள் என்றும் அவர்கள் என்ன என்ன வைத்திருந்தார்கள் என்றும் தெரியாது என்றால் சரிதான். சாராயம் விற்பவர்களா சாராயம் வைத்திருந்தவர்களா என்று தெரியாது என்றால் சரிதான். சாட்சி சொல்கிறார் பக்கத்தில் போன பிறகு தான் விற்றவர்கள் என்று தெரிந்தார்கள்.

சாராயம் விற்கிறார்கள் என்று யார் சொன்னார்கள் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தான் தகவல் வந்தது. காவல் துணை

கண்காணிப்பாளர் சொல்லி தான் எங்களுக்கு தெரியும், நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சீருடையில் துப்பாக்கி எடுத்து கொண்டு சென்றோம். அப்போது எங்களை பார்த்து பயந்து ஓடினார்கள் என்றால் சரிதான். அங்கு போன பிறகு என்ன என்ன பார்த்தேன் என்றால் சாராயத்தை பாக்கெட்டு செய்திருந்ததை பார்த்தோம் வேறு எதையும் பார்க்கவில்லை. எத்தனை பாக்கெட்டுகள் சாராயம் இருந்தது என்று எனக்கு தெரியாது நான் பார்க்கவில்லை.

அந்த துப்பாக்கி நாட்டு துப்பாக்கி என்று எனக்கே தெரியுமா என்றால் நாட்டு துப்பாக்கி தான் எனக்கே அது தெரியும். நாட்டு துப்பாக்கிக்கு லைசன்ஸ் எடுப்பதில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாட்டு துப்பாக்கி மற்றும் சாராய டியூப்களை நான் தான் எடுத்து வந்தேன் என்றால் நான் அல்ல எங்கள் டீம் எடுத்து வந்து பாகாயம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.

அதன் பிறகு காயம்பட்டவர்களை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் பாகாயம் காவல் நிலையத்திலேயே தான் இருந்தேன். அங்கு பாகாயம் காவல் நிலையத்தில் என்னை ADSP ராமதாஸ் என்பவர் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். அதை தவிர்த்து இந்த வழக்கு சம்மந்தமாக எங்களை எந்த விசாரணையும் செய்யவில்லை.

நான் என்னுடைய காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டு கொண்டதன் பேரில் மலைக்கு சென்று அங்கு ஆடு மேய்த்து கொண்டிருந்தவர்களை பார்த்து காவல் துணை கண்காணிப்பாளர் சுட்டத்தில் எதிர் பாராத விதமாக எதிரி மணி என்கிற நடுபையன் என்பவர் காலில் துப்பாக்கி குண்டு பாய்ந்ததால் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக என் உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் ஆஜர் எதிரிகள் சாராயம் விற்றதாகவும், எங்கள் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் எங்களையும் நோக்கி சுட முயற்சித்தாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த

சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. நேரம்–12.20 p.m**

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–நேரம்–03.00 p.m**

நான் போன இடம் ஆடு மாடுகள் மேய கூடிய இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் அங்கங்கு பொது மக்கள் ஆடு மாடுகள் மேய்த்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான், ஜனங்களாக நிறை பேர் இருந்தார்கள். என்னுடன் வந்த காவல் துணை கண்காணிப்பாளர் பெயர் திரு.சரவணன். நான் அந்த இடத்திற்கு ரெய்டுக்கு போனதாக சொல்லப்படுவது பொய் என்றாலும் காவல் நிலையத்திலேயே வைத்து அனைத்தும் தயார் செய்மோம் என்றால் சரியல்ல. முனிரத்தினம் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது.

**நீதிமன்ற கேள்வி**

முனிரத்திரனம் தற்போது தெரியாதா எப்போதும் தெரியாதா என்றால் பிடித்த பின் தெரியும். நீதிமன்றத்தில் இன்று ஆஜரில் உள்ளரா என்றால் நீதிமன்றத்தை பார்த்துவிட்டு தெரியவில்லை என்று தெரிவித்தார்.

4 வது எதிரி தரப்பில் மறு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

முனிரத்தினத்தை பிடித்த பின் தெரியும் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் முனிரத்திரனம் ஆஜரில் இருந்தபோதும் என்னால் அடையாளம் காண முடியவில்லை என்றால் சரிதான்.

**விசாரணை முடிந்த நேரம்:**03.10 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கைெயழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.10.13 18:07:00 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்